**ஜே.ஆர்.ஜயவர்த்தன நிலையம் - 2019**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஜே.ஆர்.ஜயவர்த்தன நிலையத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிலையத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிலையத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிலையம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிலையத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, நிருவாகம் தொடர்புபட்ட தரப்பினர்களினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் அவசியமானதாகும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கம் ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிலையத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாக மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிலையத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை

தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிலையத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிலையத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவனத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல் முகாமைத்துவத்தினை பொதுவான மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்படுத்துதல் தொடர்புபட்ட அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்களி தன்மையினைப் பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் விசேடத்துவமான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மையினைப் பேணி சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது ஒப்பீடு செய்தல் மற்றும் வித்தியாசம் காணப்படுமாயிருந்தால் அவை சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்பாட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு போதியளவான ''சிறப்பாகத் திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமை நிறுவனத்தினால் பேணுதல் அத்தியாவசியமானதாகும்.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| (அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 03 இன் பிரகாரம் முன்னைய ஆண்டிற்கான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் தவறுகள் சம்பந்தமான செம்மையாக்கல்கள் கடந்த காலத்திற்குப் பொருத்தமாக செம்மையாக்கப்பட்டு மீண்டும் மீளமைப்புச் செய்து நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட வேண்டிய போதிலும், ரூபா 26,848,148 தொகையான முன்னைய ஆண்டிற்கான தவறுகளை சரிசெய்து மீண்டும் செம்மையாக்கி முன்னைய ஆண்டிற்கான மீதிகளை மீண்டும் மீளமைப்புச் செய்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் பிரகாரம் காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதி தனித்தனியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டிய போதிலும், நிலையத்தின் கட்டிடங்களின் பெறுமதியான ரூபா 56,007,002 மாத்திரம் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | 2015 ஆம் ஆண்டின் போது மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதியை தனித்தனியாக மதிப்பீடு செய்தல் செய்யப்படுவதாகவும் அந்த மதிப்பீட்டு அறிக்கையினைப் பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் 2020 ஆம் ஆண்டிலிருந்து காணிகள் மற்றும் கட்டிடங்கள் தனித்தனியாக பதியப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதியை தனித்தனியாக நிதிக் கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் 08 ஆம் பிரிவின் பிரகாரம் நூதனசாலையில் உள்ள ஆதிகால பெறுமதி கொண்ட மரபுரீதியான சொத்துக்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் பதிவுகளின் மூலமாகவேனும் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | இது சம்பந்தமாக நூதனசாலைகள் திணைக்களம் மற்றும் தொல்பொருளியல் திணைக்களத்தின் ஆலோசனைகள் பெற்றுக் கொள்ளப்பட்டது எனவும் இது சம்பந்தமாக அனுபவமுள்ள ஒரு குழுவிற்குச் சமர்ப்பித்து நிதிரீதியான மதிப்பீட்டினைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது எனவும் தெரிவிக்கப்பட்டது. | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 1998 ஆம் ஆண்டின் போது நிலையத்தினால் ஜே.ஆர்.ஜயவர்த்தன தகவல் நிலையம் என்ற பெயருள்ள இணைத்துக் கொள்ளப்பட்ட ஒரு தனியார் கம்பனியில் ரூபா 5,000,000 முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் அக்கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகள் 2008 ஆம் ஆண்டிலிருந்து கைவிடப்பட்டிருந்தது. நிறுவனம் மூடப்பட்டு 11 ஆண்டுகள் கடந்திருந்தும் இம்முதலீட்டிலிருந்து ரூபா 700,000 மாத்திரம் மீளப் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் மிகுதியான ரூபா 4,300,000 மீதி நீண்ட கால முதலீடாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. அவ்வாறே இம்முதலீடு தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவும் இல்லை. | இம்முதலீட்டை நீண்டகால முதலீடுகளிலிருந்து நீக்குவதற்காக 2015 ஆம் ஆண்டின் போது நிருவாக சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது எனவும் உரிய முதலீட்டுப் பணத்தை கணக்குகளிலிருந்து நீக்குவதற்காக பொதுத் திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது எனவும் உரிய அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் கணக்குகளிலிருந்து நீக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. | திறைசேரியின் அங்கீகாரத்தின் பேரில் மேலதிக நடவடிக்கைகள் செய்யப்பட வேண்டியதுடன் கம்பனியை கலைத்தலானது கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் செய்யப்படுதல் வேண்டும். |

### 1.5.4 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | துணை அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதி | வித்தியாசம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் நூல் நிலைய புத்தக இருப்பு பெறுமதியும் அது தொடர்பான துணைப் பதிவேடுகளின் பிரகாரம் நூல் நிலையப் புத்தக இருப்பு பெறுமதியும் | 4,371,424 | 4,700,000 | 328,576 | அடுத்து வரும் ஆண்டின் போது நூல் நிலைய புத்தக இருப்பு பெறுமதியை சரியாக சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. | உரிய பதிவேடுகளுடன் ஒப்பீடு செய்து சொத்துக்களின் மீதிகளை செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| வெளிநிறுவனங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த கட்டிடங்களுக்காக 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய ரூபா 3,514,756 தொகையான வாடகைப் பணம் அறவிடப்பட வேண்டியிருந்ததுடன் நிலையத்திற்கு அவ்வாடகைப் பணத்தை அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது. | அறவீடு செய்ய வேண்டியுள்ள வாடகைப் பணத்தை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1988 இன் 77 ஆம் இலக்க ஜே.ஆர்.ஜயவர்த்தன நிலைய அதிகாரச் சட்டத்தின் 4(1) ஈ பிரிவு | 1996 ஆம் ஆண்டிலிருந்து நிலையத்துக்கு கிடைத்த Umatics மற்றும் ஏனைய கேட்பு பார்வை தரவுகளை பாதுகாத்தல் மற்றும் பேணிக்காத்தலுக்கு நிறுவனம் எந்த நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | இந்த ஒலி நாடாக்கள் மற்றும் ஒளி நாடாக்களை டிஜிடல் மயப்படுத்து வதற்காக ஆலோசனை பெற்றுக் கொள்ளப் பட்டுள்ளது எனவும் நிருவாக சபையின் அங்கீகாரத்தைப் பெற்று அந் நடவடிக்கையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. | அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 756 | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான பொருள் மீளாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | அடுத்துவரும் ஆண்டிலிருந்து பொருள் மீளாய்வு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனக் குறிப்பிடப்பட்டது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்க வில்லை. | அடுத்துவரும் ஆண்டின் போது நிலையான சொத்துக்கள் பதிவேடு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் சொத்துக்கள் பதிவேட்டினை பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| (i) | 4.2.2 ஆம் பந்தி மற்றும் 4.2.3 ஆம் பந்தி | நிருவாக சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்காததனால் மாதாந்த நிதிக் கூற்றுக்களை மீளாய்வு | மேன்மைதங்கிய சனாதிபதி, பிரதம மந்திரி, சபாநாயகர், எதிர்கட்சித் தலைவர், ஆகியோரை | சுற்றறிக்கையின் பிரகாரம் நிருவாக சபைக் கூட்டங்களை நடத்துவதற்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செய்தல் மற்றும் செயலாற்றல் அறிக்கையை அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பித்தல் இடம்பெற்றிருக்கவில்லை. | உள்ளடக்கிய இலங்கையின் நிருவாக கட்டமைப்புக்குள் இருக்கின்ற அதிக அளவான வேலைப் பழுவுள்ள நபர்களை உள்ளடக்கிய நிருவாக சபை காணப்படுவதனால் நிருவாக சபைக் கூட்டம் 2019 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி வரையான காலப்பகுதியின் போது நடாத்துவதற்கு முடியாமல் போனமையின் காரணமாக மாதாந்த நிதிக்கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கைக்காக நிருவாக சபையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 5.2.5 ஆம் பந்தி | நிருவாக சபைக் கூட்டங்கள் நடாத்தப்படாதிருந்ததனால் வருடாந்த பாதீடானது நிருவாக சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருக்க வில்லை. | 2019 ஆம் ஆண்டிற்கான நிருவாக சபைக் கூட்டங்கள் நடாத்தப்படாததனால் இதற்குத் தேவையான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.9.1(அ) பிரிவு | ரூபா 250,000 இனை மிகைத்த ஒப்பந்தங்களுக்காக முறையான ஒப்பந்த உடன்படிக்கை செய்து கொள்ளப்பட வேண்டிய போதிலும், ரூபா 995,650 மற்றும் ரூபா 333,600 பெறுமதியான இரண்டு ஒப்பந்தங்களுக்காக முறையான உடன்படிக்கை செய்து கொள்ளப்படவில்லை. | எதிர்காலத்தில் முறையான ஒப்பந்த உடன்படிக்கைகளில் கையொப்பமிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | பெறுகை வழிகாட்டிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஊ) | 2015 மே 25 ஆந் திகதிய PED01/2015 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| (i) | 3.5 ஆம் பிரிவு | உத்தியோகபூர்வ வாகனத்திற்கு தகைமையுள்ள உத்தியோகத்தரினால் மீளாய்வாண்டின் போது குளாம் வாகனத்தை தனிப்பட்ட செயற்பாட்டிற்காக 6229 கிலோ மீற்றர் ஓடி அதற்காக ரூபா 136,203 தொகையான எரிபொருளுக்காக நிலையத்தினால் செலவு செய்யப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | சுற்றறிக்கை ஒழுங்குபடுத்தல்கள் மற்றும் எல்லைகளுக்கு உட்பட்டு எரிபொருள் படியினைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 3.8 ஆம் பிரிவு | உத்தியோகபூர்வ வாகனத்திற்கு தகைமையுள்ள உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட பயணத்திற்காக ஈடுபடுத்தப்பட்ட சாரதியின் மேலதிக நேர வேலை மற்றும் ஏனைய படிகள் ரூபா 202,473 தொகை நிலையத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது. | சுற்றறிக்கை ஒழுங்குபடுத்தல்களுக்கு இணங்க மேலதிக நேர வேலைப்படியினைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | 2016 திசெம்பர் 22 ஆந் திகதிய தேசிய நூலக மற்றும் ஆவணவாக்கல் சேவைகள் சபையின் 2004/நூல்/01 (2016 இல் திருத்தப்பட்டது) ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவு | 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு புத்தகங்கள் தொடர்பாக மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | அடுத்துவரும் ஆண்டிலிருந்து சுற்றறிக்கையின் பிரகாரம் புத்தகங்கள் தொடர்பாக மீளாய்வினைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சுற்றறிக்கை ஒழுங்குபடுத்தல்களுக்கு இணங்க நூல் நிலைய புத்தகங்கள் தொடர்பான மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும். |

### 1.8 வரிப் பிரமாணங்களுடன் இணங்கியிருக்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 2015 யூலை 06 ஆந் திகதிய வருமானவரி ஆணையாளர் நாயகத்தின் SEC/2015/15 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் 2018 ஏப்ரல் 01 ஆந் திகதிய 2064/60 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் இரண்டாவது சேவைப் பிரகடனத்தின் கீழ் செயலாளர் நாயகத்திடமிருந்து ரூபா 166,390 தொகையான உழைக்கும் போதே செலுத்தும் வரி அறவிட்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. | தவணை அடிப்படையில் இப்பணத்தை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் செலுத்துவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | வரிப் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக நிலையத்தின் நிதி விளைவு ரூபா 9,110,635 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 11,176,004 ஆக இருந்ததனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதி விவைுகளில் ரூபா 2,065,369 வீழ்ச்சியாகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் ஆளணி வேதனச் செலவுகள் ரூபா 720,162 இனாலும் பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் செலவுகள் ரூபா 647,943 இனாலும் அதிகரித்தல் மேற்கூறிய வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 2.2 விகிதாசாரப் பகுப்பாய்வு

நிலையத்தின் தொழில்படு மூலதன முகாமைத்துவம் தொடர்பாக கவனத்திற்கு எடுத்துக் கொள்ளும் போது முன்னைய ஆண்டில் 7.6:1 ஆகக் காணப்பட்ட நடைமுறை விகிதமானது மீளாய்வாண்டில் 7.9:1 ஆக இருந்ததுடன் விரைவுச் சொத்துக்கள் விகிதம் முன்னைய ஆண்டில் 7.4:1 மற்றும் மீளாய்வாண்டில் 7.6:1 ஆகும். நடைமுறைச் சொத்துக்களில் 77 சதவீதமானவை குறுங்கால முதலீடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மதிப்பீட்டுத் திணைக்களத்திட மிருந்து வருடாந்த வாடகை மதிப்பீட்டினைப் பெற்றுக் கொள்ளாது கொழும்பு மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தில் அதிகளவு சந்தைப் பெறுமதியைக் கொண்ட ஒரு காணியில் அமைந்துள்ள இந்த அலுவலக வளவானது ஒரு சதுர அடிக்கு மாதாந்தம் ரூபா 67 இலிருந்து ரூபா 165 இற்கு இடைப்பட்ட மிகவும் குறைந்த விலையின் கீழ் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தும் அவ்விலையை நிகழ்கால சந்தைப்பெறுமதிக்கு ஒத்த வகையில் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் மாதாந்த வாடகை மதிப்பீட:டு அறிக்கையினைப் பெற்றுக்கொண்டு ஒரு சதுர அடிக்கு அறவிடப்படுகின்ற வாடகைப் பணத்தை திருத்தம் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | நிகழ்கால சந்தை மதிப்பீட்டுப் பெறுமதிக்கு ஒத்ததாக வாடகைக் கட்டணத்தை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நிலையத்தினால் வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த நான்கு கட்டிடங்களுக்கான வாடகையாளர்களுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கைகளின் செல்லுபடியான காலம் முடிவடைந்திருந்தும் வாடகை உடன்படிக்கையின் காலத்தை நீடிக்காது அந்த வாடகைதாரர்கள் முன்னைய வாடகைக் கட்டணத்தின் கீழ் கட்டிடங்களில் குடியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | இந்நிறுவனத்திற்கான குத்தகை உடன்படிக்கையை தயாரிக்கும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. | முறைப்படியான உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2002 ஆம் ஆண்டின் போது ஒரு தனியார் வங்கியில் ரூபா 9,725,000 முதலீடு | இப்பணத்தை மீண்டும் முதலீடு செய்வதற்கு தேவையான | சட்டரீதியான தடைகளை இணக்கப்பாட்டிற்கு |

| | | |
|---|---|---|
| செய்யப்பட்டிருந்ததுடன் அவ்வங்கி மூடப்பட்டு அவ்வங்கியின் செயற்பாடுகள் இலங்கை மத்திய வங்கியினால் பொறுப்பேற்கப்பட்டு பொறுப்புக்களைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக நிலையத்தினால் ரூபா 972,500 வட்டிப் பணம் இழக்கப்பட்டிருந்ததுடன் நிருவாக சபையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளாததன் காரணமாக வைப்புப் பணம் மற்றும் வட்டியின் மொத்த தொகையான ரூபா 14,101,250 பணத்தை 2020 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை மீள அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது. | அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுத்து உரிய வங்கி வைப்புக்களை மீண்டும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 பெறுகை முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| நிலையத்தினால் ரூபா 547,100 தொகையான 3 பாதுகாப்பு உபகரணங்கள் போலியாக பதிவு செய்த நிறுவனங்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இதன் காரணமாக இந்த உபகரணங்களில் குறைபாடுகள் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றை மீள சரிசெய்து கொள்வதற்கு முடியாதிருந்தது. | இணங்கி கொள்வதாகவும் எதிர்காலத்தில் பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது சட்டவிதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பவதாகவும் அறிவிக்கப்பட்டது. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| அங்கீகரித்த பதவியணியில் காணப்படுகின்ற 10 வெற்றிடங்களை நிரப்புவதற்கு போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வெற்றிடமாகக் காணப்படுகின்ற பதவிகளுக்காக ஊழியர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க ரூபா 8,735,000 பெறுமதியான இலக்கிடப்பட்ட 23 செயற்பாடுகளில் ரூபா 8,385,000 மதிப்பீட்டு பெறுமதியைக் கொண்ட 22 செயற்பாடுகள் மீளாய்வாண்டில் இடம்பெற்றிருக்கவில்லை. மீளாய் வாண்டின் போது நிறைவேற்றப்படாத 22 செயற்பாடுகளில் 19 செயற்பாடுகளும் 2016 ஆம் ஆண்டின் போது ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் என்பது அவதானிக்கப்பட்டது. | அடுத்துவரும் ஆண்டிலிருந்து செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படும். | செயல் நடவடிக்கைத் திட்டத்தினை விளைதிறனாக அமுல்படுத்து வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| பாதீடு செய்யப்பட்ட பெறுமதிக்கும் உள்ளபடியான பெறுமதிக்குமிடையே 3 சதவீதத்திலிருந்து 867 சதவீதம் வரையான வீச்சுடைய முரண்கள் அவதானிக்கப்பட்டதனால் பாதீடு விளைதிறனாக நிதிக் கட்டுப்பாட்டுக் கருவியாக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | எதிர்பார்க்கப்படாத செலவுகள் 2019 ஆம் ஆண்டின் போது ஏற்பட்டதனால் இந்நிலைமை உருவாகியுள்ளது. | பாதீட்டினைத் தயாரிக்கும் போது வருடாந்தம் நிறைவேற்றப்பட்ட வேண்டிய முன்னுரிமைச் செயற்பாடுகளை உறுதியாக இனங்கண்டு பாதீட்டினைத் தயாரித்து அச்செயற்பாடு களை நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் நிறை வேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |